**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 163-2023**

**Prosecution witness : அ.சா. 1 Date : 31.07.2023**

| Name : சுப்ரமணி | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused 1,2,4 present. ) (Accused 3 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சந்தைகாடு குடியிருந்து நெசவு வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த ஒன்றரைஆண்டுகளுக்கு காலை 08.30 மணிக்கு முன்பு நிலம் சம்மந்தமாக எனக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது. நான் எனது நிலத்தில் புற்களை பிடிங்கி கொண்டிருந்தபோது, எதிரிகள் நான்கு பேரும் வந்து எங்கள் நிலம் என்று சொந்தம் கொண்டாடினார்கள். எங்களை வேலை செய்யக்கூடாது என்று சொல்லி, ஆயா, அம்மா என்று கெட்டவார்த்தையால் திட்டினார்கள்.

2) பாஸ்கரன் என்பவர் எனது தலையில் மண் வெட்டியால் அடித்து, காயம் ஏற்படுத்தினார். எதிரி பிரபு என்பவர் உருட்டு கட்டையால் இடது கையில் சுண்டு விரலில் அடித்து காயம் ஏற்படுத்தினார். அண்ணாமலை என்பவர் உருட்டுகட்டையால் எனது முதுகில் அடித்து காயம் ஏற்படுத்தினார். எதிரி சந்திரா என்பவர் எனது மனைவியின் தலைமுடியை பிடித்து அடித்தார். பிரபு என்பவர் நாங்கள் மருத்துவமனை செல்லும் போது, ரோட்டில் வைத்து சூரீ கத்தியை எடுத்து வந்து மூன்று பேரையும் கொல்லாமல் விடாமாட்டேன் என்று மிரட்டினார்.

3) பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் மேட்டூர் அரசு மருத்துவமனை சென்று 9

நாட்கள் உள்நோயாளியாக இருந்தேன். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார்வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். எனது மகளையும் எதிரிகள் மிரட்டினார்கள்.

4) ஆஜர் எதிரிகள் தான் என்னை அடித்தனர் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

ஒம்/– தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 163-2023**

**Prosecution witness : அ.சா. 2 Date : 31.07.2023**

| | |
|---|---|
| **Name : கலா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1,2,4 present. ) (Accused 3 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மேச்சேரியில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். அ.சா1. எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு காலை 7 மணிக்கு முன்பு நிலம் சம்மந்தமாக எனக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது. நாங்கள் வீட்டு வேலை செய்துகொண்டிருந்தபோது, எனது மகன் பெருமாள் கூட்டிக்கொண்டிருந்தபோது, எங்களுடைய நிலத்தில் என்ன கொட்டப்போகிறீர்கள் என்று பிரச்சனை செய்தார்கள்.

2) என்னையும் , எனது மகன், எனது கணவயும் சந்திரா, அண்ணாமலை, பிரபு, பாஸ்கர் எனது வீட்டின் முன்பாக மண் வெட்டியால் எனது கணவரை தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். பிறகு எனது கணவரின் கைவிரலில் கட்டையால் அடித்தார்கள். இதனால் எனது கணவருக்கு காயம் ஏற்பட்டது.

நான் எனது நிலத்தில் புற்களை பிடிங்கி கொண்டிருந்தபோது, எதிரிகள் நான்

உருட்டுகட்டையால் எனது முதுகில் அடித்து காயம் ஏற்படுத்தினார். பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் எனது கணவரை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்து 7 நாட்கள் உள்நோயாளியாக இருந்தார். ஆஜர் எதிரிகள் தான்

என்னை அடித்தனர் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

ஒம்/– தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 163-2023**

**Prosecution witness : அ.சா. 3 Date : 31.07.2023**

| Name : பெருமாள் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused 1,2,4 present. ) (Accused 3 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சந்தைகாடு குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். அ.சா.1, 2 எனது பெற்றோர்கள் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 07.01.2022-ம் தேதி காலை 07.30 மணிக்கு எனது வீட்டின் அருகில் உள்ள எங்களது நிலத்தை நான் சுத்தம் செய்துகொண்டிருந்தபோது, எதிரி சந்திரா என்னை பார்த்து கெட்டவார்த்தையால் தேவடியா பையா என்று சொல்லி திட்டினார். எதிரி பாஸ்கர் வந்து என்னை எதற்காக சுத்தம் செய்கிறாய் என்று கேட்டார்.

2) பிறகு குப்பைகளை அள்ளி எங்கள் வீட்டின் மீது போட்டார்கள். எதிரி பாஸ்கர் என்னை ரோட்டில் இழுத்து கையால் எனது கழுத்தில் அடித்தார்கள். சத்தம் கேட்டு எனது பெற்றோர்கள் சம்பவயிடம் வந்தபோது, எதிரி அண்ணாமலை மற்றும் சந்திரா என்னை அடிப்பதற்காக பிடித்தார்கள். பிறகு எனது பெற்றோர் வந்தவுடன் எனது பெற்றோர்களை அடித்தபோது, அதில் எதிரி பிரபு மண்வெட்டியால் எனது அப்பா தலையின் மீது அடித்து காயம் ஏற்படுத்தினார்.

3) எதிரி பாஸ்கர் அ.சா.2 ன் தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி

அடித்தார். எதிரிகள் மூன்று பேரும் சேர்ந்து எனது அப்பாவை அடித்தார்கள். பிறகு எனது அப்பாவை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு சென்று சேர்த்தோம். ஆஜர் எதிரிகள் தான் என்னை அடித்தனர் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். எதிரி பாஸ்கர் என்பவர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—</u>**

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

ஒம்/— தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.